155

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**இளங்கலை சட்டமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு திட்டம்**

**இறுதிப் பரீட்சை – 2022/2023**

3406

**LLU3505 – நியதிச் சட்டங்களைப் பொருள்கோடல் செய்தல்**

**காலம் - மூன்று(03) மணித்தியாலங்கள்**

**திகதி: 10.03.2024** **நேரம்: மு.ப.9.30 – பி.ப 12.30**

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08**

**ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

**தெளிவற்ற கையெழுத்துக்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. "எமது சொந்த சட்டவாக்கத்தை பொருள்கோடல் செய்வதிலும் கூட, எமது பாரம்பரிய அணுகுமுறையை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதிக தாராள மனப்பான்மையை பின்பற்றுவது நல்லது. நாம் சட்ட ஏற்பாட்டின் அடிப்படையிலான 'பொது சட்டமியற்றும் நோக்கத்தை ஊக்குவிக்கும் அத்தகைய கட்டுமானத்தை பின்பற்ற வேண்டும்."

(Lord Denning in *Seaford Court Estates Ltd v. Asher*, (1949) 2 K.B. 481 (498)

மேற்தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?

'பொது சட்டமியற்றும் நோக்கத்திற்கான' தேடலில் நீதிமன்றங்களால் பின்பற்றப்பட்ட பல்வேறு அணுகுமுறைகளின் விளைவாந்தன்மையினை பரிசீலிக்குக. இலங்கை மற்றும் ஏனைய இரண்டு நியாயாதிக்கங்களிலிருந்து தீர்ப்புச் சட்டத்தை மேற்கோள் காட்டி உமது வாதங்களினை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

02. 16 வயது சிறுவனான ராகுல், அவனது சட்டபூர்வ பாதுகாவலரான அவனது மாமாவுடன் லேக்லேண்ட் அரசில் வசிக்கின்றான். ராகுல் கிராமத்தில் உள்ள ஒரு உள்ளூர் பாடசாலையில் கல்வி கற்கின்றான். பாடசாலை மணித்தியாலங்களுக்குப் பிறகு, அவன் தனது மாமாவுக்கு அவர்களின் குடும்பத்துக்கு சொந்தமான பலசரக்குக் கடையில் அலுமாரிகளை ஒழுங்கமைத்தல், மற்றும் வாடிக்கையாளர்களுக்கு உதவுதல் போன்ற பணிகளைக் கையாளுதல் போன்றவற்றில் உதவுகின்றான். அவனது உதவிக்காக ஒரு சிறிய தினசரி கொடுப்பனவையும் பெறுகின்றான்.

பெப்ரவரி 2022 இல், லேக்லேண்ட் 'இளைஞர் வேலைவாய்ப்பு பாதுகாப்புச் சட்டத்தை' அறிமுகப்படுத்தியது. சுட்டத்தின் பாயிரமானது பின்வருமாறு கூறுகின்றது:

"வேலைவாய்ப்பில் இளைஞர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒரு சட்டம். இளைஞர்கள் அவர்களின் நல்வாழ்வு, கல்வி, ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தீங்கு விளைவிகும் வேலைகளில் ஈடுபடாமல் இருப்பதை உறுதி செய்வதே இச்சட்டத்தின் நோக்கமாகும்."

மேலும் இச் சட்டமானது பின்வரும் ஏற்பாட்டினையும் உள்ளடக்கியுள்ளது:

**பிரிவு 4:** 'எவரும் ஒரு இளைஞரை அவர்களின் உடநலம், பாதுகாப்பு, கல்வி அல்லது பொது நலனுக்குக் கேடு விளைவிக்கும் எந்த வேலையிலும் ஈடுபடுத்தக் கூடாது.'

**விளக்கம்:** "இளைஞர்களின் கல்வி மற்றும் நல்வாழ்வில் தலையிடாத வகையில், அவர்களின் திறன்கள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிக்கும் இலகுவான, அபாயமற்ற வேலைகளில் ஈடுபடுவதை சட்டம் தடை செய்யவில்லை."

**சட்டத்தின் அட்டவணை II** இளைஞர்களுக்கு பொருத்தமான அவர்களின் பாதுகாப்பு அல்லது கல்விக்கு அச்சுறுத்தல் இல்லாமல் திறன்கள் மற்றும் பொறுப்பினை மேம்படுத்தும் நடவடிக்கைகள் உள்ளடங்களாக "அனுமதிக்கப்பட்ட ஒரு வேலைப்" பட்டியலினை வழங்குகின்றது.

மேலும், **பிரிவு 20** ஆனது, 'இளைஞன் என்பதை 18 வயதுக்குட்பட்ட ஒரு தனி நபர் என வரையறை செய்கிறது': மற்றும் 'ஆபத்து விளைவிக்கும் வேலை' என்பது அதன் தன்மை அல்லது சூழ்நிலைகளால், இளைஞர்களின் உடல் நலம், பாதுகாப்பு, கல்வி அல்லது தீங்கு விளைவிக்கும் வேலைவாய்ப்பு ஆகும்.'

ஒரு நாள் ராகுலின் வகுப்பாசிரியர், அவனது கைகளில் மீதான் காணத்தைக் கவனித்து, வகுப்பில் கவனம் செலுத்த முடியாமல் தவிப்பதைக் கவனித்தார். ஆசிரியர் ராகுல் குடும்பத்திற்குச் சொந்தமான கடையில் வேலை செய்வதை அறிந்ததுடன் மற்றும் ராகுல் அவனது நல்வாழ்வைக் கெடுக்கும் வேலையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி, பொலிஸ்

நிலையத்தில் ஒரு முறைப்பாட்டினை தாக்கல் செய்வதற்குத் தீர்மானித்தார். நீதிமன்றத்தில், ராகுலின் மாமா, ராகுல் செய்யும் வேலையானது அபாயகரமானது அல்ல என்றும், அவரது தனிப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிப்பதாகவும் வாதிடுகின்றார். இந்த வேலை ராகுலின் உடல் நலம், பாதுகாப்பு மற்றும் கல்வியை மோசமாகப் பாதிக்கலாம் என அரசு வாதிடுகின்றது.

ஒரு நீதிபதியாக உமது தீர்ப்பு எதுவாக இருக்கும்? இளைஞர் வேலைவாய்ப்பு பாதுகாப்புச் சட்டம் 2022 இனது தொடர்புடைய பிரிவுகளை பொருள்கோடல் செய்வதற்கு நீர் பின்பற்றும் பொருட்கோடல் விதிகள் மற்றும் உள்ளக மற்றும் வெளியக உதவிகளையும் எடுத்துக்காட்டினையும் அவற்றுக்கான காரணங்களையும் வழங்கி, விளக்குக. லேக்லேண்டின் சட்ட முறைமையானது இலங்கையினை ஒத்தது எனக் கருதுக.

(20 புள்ளிகள்)

03. "பொதுச் சட்டத்தின் கோட்பாடுகளாக, ஊகங்கள் நீதியின் உள்ளார்ந்த கோட்பாடுகள் மற்றும் உயர் பெறுமதிகளையும் உள்ளடக்கியது. கடுமையான, நியாயமற்ற அல்லது அநீதியான விளைவுகளை கருதியிருக்கவில்லை என்ற ஊகங்களின் அடித்தளக் கோட்பாடு, உரிமைகள் பட்டயத்தில் மெருகேற்றப்பட்ட அடிப்படை உரிமைகளின் நோக்கம் மற்றும் எல்லையுடன் முழுமையாகப் பொருந்துகின்றது"

Annete Singh, '*The impact of the constitution on transforming the process of statutory interpretation in South Africa*' (2014)

மேற்தரப்பட்ட கூற்றின் பிண்ணனியில், நீதிமன்றங்களினூடாக தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் நீதியை வலியுறுத்தலில் பொதுச் சட்ட ஊகங்களின் பங்கினை மதிப்பீடு செய்க. உமது மதிப்பீடானது, குறைந்தது மூன்று ஊகங்களின் மீது கவனம் செலுத்துவதுடன், தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(20 புள்ளிகள்)

04. அஸ்டோரியா பல்கலைக்கழகத்தின் ஒரு விஞ்ஞான மாணவியான கேட், பல்கலைக்கழக ஆய்வகத்தின் நுழைவாயிலில் ஒரு சீரற்ற பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். பாதுகாப்புப் பணியாளர், அவளது பையில் இரசாயனப் பொருள் அடங்கிய ஒரு சிறிய குப்பியைக் கண்டுபிடித்தனர். இரசாயனப் பாதுகாப்பு மற்றும் ஆய்வக பாதுகாப்புச் சட்டம், முன் அனுமதியின்றி ஏதாவது இரசாயனத்தின் அங்கீகரிக்கப்படாத உடைமையானது

தடைசெய்யப்பட்டுள்ளது என்ற ஏற்பாட்டைக் கொண்ட கடுமையான கொள்கையொன்றை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

கேட் இந்த இரசாயனப் பொருளானது ஊறுவிளைவிக்காதது எனவும் தனது ஆய்வுத் திட்டத்தின் தனிப்பட்ட பரிசோதனையின் ஒரு பகுதி என்றும் வலியுறுத்துகின்றாள். இந்த வழக்கில் நீதிபதி என உம்மைக் கருதி, கேட்டினுடைய சூழ்நிலை தொடர்பில் இரசாயனப் பாதுகாப்பு மற்றும் ஆய்வக பாதுகாப்புச் சட்டத்தினை எவ்வாறு பொருள்கோடல் செய்வீர்?

தொடர்புடைய தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்தி, பொருள்கோடலில் சட்ட முதுரைகளின் பிரயோகத்தினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. மேடா பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் சட்டத்தில் ஓர் இளங்கலை பட்டதாரி மாணவரான பிரவீன், இயங்கை வளங்கள் சட்டத்தில் தனது இறுதிப் பரீட்சையை எடுத்துக்கொண்டிருந்தான். பரீட்சை நடபடிமுறைக்கு அமைவாக, பரீட்சை தொடங்குவதற்கு ஐந்து நிமிடங்கள் முன்னதாக விடைச் சிற்றேடுகள் விநியோகிக்கப்பட்டன. பிரவீன் விடைச் சிற்றேட்டினை பெற்ற போது, அவன் பாடத்துடன் தொடர்புடைய பல பிரிவுகள் மற்றும் வழக்குகளினை விடைச் சிற்றேட்டில் குறிப்பிட்டு எழுதினான். பின்னர், கண்காணிப்பாளர் ஒருவர், விடைச் சிற்றேட்டின் அட்டைப்பகுதியில் இருந்த குறிப்புக்களை கவனித்ததுடன், அதனை பிரவீன் ஓர் பரீட்சைக் குற்றத்தை மேற்கொண்டதாக தலைமை மேற்பார்வையாளருக்கு முறைப்பாடு செய்தார். பல்கலைக் கழகத்தின் பரீட்சை ஒழுங்கு விதிகளானது பின்வருமாறு கூறுகின்றது:

*6.1.1. பரீட்சை இடம்பெறுகின்ற வேளையில், அனுமதிக்கப்படாத பொருட்களை உடைமையில் வைத்திருக்கும் எந்தவொரு பரீட்சாத்தியும் ஓர் பரீட்சைக் குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கருதப்படும். அனுமதிக்கப்படாத பொருட்கள் என்பது, சிறு குறிப்புக்கள், பாடப் புத்தகங்கள், மின்னணு சாதனங்கள் மற்றும் ஒத்த தன்மையைக் கொண்ட பொருட்கள் போன்றவற்றை உள்ளடக்கியது ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டது அல்ல.*

தலைமை மேற்பார்வையாளர் இச் சம்பவத்தினை பல்கலைக்கழகத்திற்கு முறையிட்டார். இந்த விடயத்தின் மீதான ஓர் விசாரணை நடாத்த திட்டமிடப்பட்டது. பிரவீன் ஒழுங்குவிதிகளானவை அனுமதிக்கப்படாத பொருட்களை மாத்திரம் குறிப்பிடுவதனால் அவன் எந்த விதிகளையும் மீறவில்லை என நம்பினான். மேலும், அவனது குறிப்புகள் அவனுக்கு கொடுக்கப்பட்ட விடைச் சிற்றேட்டின் அட்டைப் பக்கத்தில் எழுதப்பட்டிருந்ததாகவும் கருத்தில் எடுத்தான்.

பொருத்தமான நியதிச் சட்டப் பொருள் கோடல் விதிகளைப் பிரயோகித்து, மேடா பல்கலைக்கழகத்தின் பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பிரவீன் பரீட்சைக் குற்றத்தை செய்துள்ளாரா எனப் பரிசீலிக்குக. இயைபான சட்ட அதிகாரங்களுடன் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

06. வைல்ட் ஐலன்ட் ஆனது எந்தவித இடையூறும் இன்றி குறிப்பிட்ட காலத்தில் தேர்தல்களினை நடாத்தும் நடைமுறையினைக் கொண்டிருக்கும் ஜனநாயக அரசியல் முறைமையுடன் கூடிய ஒரு அரசாகும். 2022 இல், நாடானது ஓர் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. வைல்ட் ஐலன்ட் இன் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாகிய திரு. ஜே, ஒரு பொது அறிக்கையில் பொருளாதார நெருக்கடியினை கடந்து வருவதற்கு பொதுமக்கள் அவருக்கு ஆதரவளிக்க வேண்டும் என வலியுறுத்தினார். வைல்ட் ஐலன்ட் இன் உள்ளூராட்சித் தேர்தல்கள் செப்டெம்பர் 2022 இல் நடைபெறவிருந்தன. இருப்பினும், ஜனாதிபதி ஜேயின் கட்டளைகளின் கீழ் அரசாங்கமானது தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களை திரட்ட வேண்டாம் என தீர்மானித்தது. அரசாங்கமானது, நெருக்கடியான தருணத்தில், தேசம் ஒன்றுகூட வேணடும் எனவும் தேல்தல்கள் சமூக நல்லிணக்கத்தைத் தடை செய்யும் எனவும் கூறியது. ஏதிர்க் கட்சியினர், உள்ளூராட்சி அரசாங்கத் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் சிறப்பாக செயற்படுவதிலிருந்து தடுக்கவே இது செய்யப்பட்டுள்ளது எனக் கூறினர். எதிர்க்கட்சி ஆதரவாளர்கள், உள்ளூராட்சி தேர்தல்களினை நடாத்ததன் மூலம் அரசாங்கம் அரசியலமைப்பை மீறியுள்ளதாக வாதிடுகின்றனர்.

பின்வருவன வைல்ட் ஐலன்ட் அரசியலமைப்பில் குறிபபிடப்பட்டுள்ள வாக்குரிமையுடன் தொடர்புடைய அரசியலமைப்பு உறுப்புரைகளாகும்.

*உறுப்புரை 3: வைல்ட் ஐலன்ட் குடியரசின் இறைமை மக்களிடம் உள்ளது மற்றும் அது பாராதீனப்படுத முடியாததாகும். இறைமை என்பது, அரசாங்கத்தின் அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை என்பவற்றை உள்ளடக்கும்.*

*உறுப்புரை 4: மக்களின் இறைமையானது பின்வரும் முறையில் பிரயோகிக்கப்பட்டு அனுபவிக்கப்படும்.*

*(...) (ஈ) வாக்குரிமையானது, பதினெட்டு வயதை அடைந்த ஒவ்வொரு பிரஜையினாலும் குடியரசு ஜனாதிபதிக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான தேர்தலிலும் மற்றும் ஒவ்வொரு மக்கள் தீர்ப்பிலும் பிரயோகிக்கப்படும். (...)*

மேலும், அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் பின்வரும் சொற்கூறுகளில் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை அங்கீகரிக்கின்றது:

உறுப்புரை *14 (1) ஒவ்வொரு பிரஜையும் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராவார்-*
*(அ) வெளிப்படுத்தல் உட்பட பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரமும்.*

எதிர்க்கட்சி செயற்பாட்டாளர்கள் அரசாங்கத்தின் இந்தத் தீர்மானமானது, பிரஜைகளின் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தை மீறுவதாக உள்ளது என வாதிடுகின்றனர். அரசியலமைப்பு பொருள்கோடலிற்கான வேறுபட்ட அணுகுமுறைகளின் மீது கவனஞ் செலுத்துகையில், எதிர்க்கட்சியினர் உரிமைகள் மீறல் தொடர்பாக சட்டபூர்வமாக வெற்றிகரமான ஒரு கோரிக்கையை முன்வைக்க முடியுமா என்பதை ஆராய்க. உமது விடையானது, தொடர்புபட்ட அதிகாரங்களால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(20 புள்ளிகள்)

07. 'சர்வதேசப் பொருத்தணைகளானது சர்வதேச சட்டங்களை உருவாக்குவதற்கான ஓர் முக்கிய தோற்றுவாயாகும். இருப்பினும், பொருத்தணைகள் பொருள்கோடல் செய்யப்படும் விதமானது, உள்நாட்டுச் சட்டங்கள் பொருள்கோடல் செய்யப்படுவதிலிருந்து வித்தியாசமானதாகும்.'

நீர் மேற்தரப்பட்ட கூற்றுடன் உடன்படுகின்றீரா? பொருத்தமான உதாரணங்கள் கொண்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றின் மீது சிறு குறிப்புக்கள் வரைக.

(அ). நியதிச்சட்ட மொழி மற்றும் பாலின பாரபட்சம்
(ஆ). சட்ட மொழிகளின் உறுதியற்ற தன்மை
(இ). வலுவேறாக்கம் மற்றும் நீதிசார் பொருள்கோடல்
(ஈ). ஒரு விடயம் வறிதாக்கப்படுவதை விட, ஓர் விளைவினைக் கொண்டிருப்பது சிறந்தது *(The Utres negis releat guam perent maxim)*

(5 ×4 = 20 புள்ளிகள்)

*-பதிப்புரிமை பெற்றது-*